கணபதி துணை.

# காத்தான்

என்கிற இயற்பெயருடைய

# வருணகுலாதித்தன் மடல்.

(விநாயகர் காப்பு.)

மாதுபுணர்காத்தான்வருணகுலாதித்தன்மேற்செய் ... ... *
றோதுதமிழ்ப்பாவுலாமடற்குப் போதகர் ... ... *
சந்தமுலைச்சந்த்ரநுதற்சங்கரிபுத்ரன்கருணைக் ... ... ... *
கந்தமதத்தந்திமுகன்காப்பு ... ... ... ... *

(முருகர் காப்பு)

எங்குமுள்ளவர்ணனைகளெல்லாமெடுத்தார்ந்து ... ... *
மங்கையர்கள்சிங்காரம்வாழ்த்தியே-மங்கள் ... ... ... *
வருணகுலாதித்தன்மடல்பாடுதற்குக் ... ... ... *
கருணைபொழியாறுமுகன்காப்பு... ... ... ... *

(பாட்டுடைத்தலைவன்சிறப்பு.)

கருணைமுகிலானகொடைக்காத்தானென்றுரைக்கு ... ... *
வருணகுலாதித்தன்மகிழ்ந்தால்-அருணமலாச ... ... *
செங்கையெங்குஞ்சங்குசங்குந் திங்கள்பொங்குங்கங்குண்மங்கும்
கொங்கையெங்குங்குங்குமந்தங்கும் ... ... ... ... *

(மாதின்சிறப்பு)

நீர்கொண்டமேகநிறங்கொண்டமேனியாய் ... *
பார்கொண்டபாதப்பரந்தாமன்-சீர்கொண்ட ... (க)

உம்பருக்குமாலெழுப்பியோங்குநெடுமேத்தாகச் ... ... *
செம்பொற்கிரியைத்திரிந்ததுவும்-அம்பரத்து ... (உ)

வீசுமதிதுளுகமேனிமெலிவித்ததுவும் … … *
வாசுகியைநாணுவருத்தியதும்-ஓசையலை … … (௩)

தன்னைக்கடைந்ததுவுந்தன்னைமூதத்தோடிந்த .. *
பின்னைத்தழுவியதுமெண்ணுமல்-பன்னித் … … (௪)

திரம்பேசுங்கோவலர்பாற்சென்றபதினாறு … … *
யிரம்பேர்மணம்புணர்ந்தாரென்றும்-பெருங்கனக … (௫)

வல்லார்க்குங்கொங்கைமடவார்முதலாய … … *
எல்லார்க்குமாலாயிருமென்றும்-சல்லாப … … (௬)

சிந்தைதனைமற்றோர்பாற்செல்லாவசீகரிக்க … … *
வந்துலகிலுற்பவித்தமாமாது-அந்தரத்தில் … … (௭)

ஓதினியமின்போலொளியாமலெப்பொழுதும் … … *
மேதினியிற்சஞ்சரிக்குமின்கொழுந்து-பூதலத்தில் … …(௮)

பைந்தொடியார்கோலம்பகல்விளக்குப்போலாக … … *
வந்தொருநத்தாமணிவிளக்குச்-சந்தப் … … (௯)

படிவமெடுத்தபசுந்தோகையோகைப் … … *
பிடிநடையன்னத்தின்பேடை-அடிதுவக்கித் … …(௰)

தங்குங்கொழுந்தென்றுதள்ளாமலோரிடம்போல் … … *
எங்குந்தித்திக்குமிளங்கரும்பு-பொங்குமெயில் … (௰௧)

கண்டுமுகங்கருகாக்கண்டென்றுத்தாதுநிரா … … *
வண்டுதுவையாமதுமாலை-அண்டர்பால் … … (௰௨)

சோராக்கலைகுறையாச்சுற்றுமுயற்களங்கம் … … *
சேராமறையாச்செழுந்திங்கள் ஆராயும் … … (௰௩)

மைத்தவழுந்தென்பான்மலயமலையிற்பிறவாச் … *
சித்தசனேறாச்சிறுதென்றல் வைத்த … … (௰௪)

உலைபுகாக்காயாவுருகாநிறக்குந் … … *
தலைபுகாமாற்றுரையாச்சொர்ணம்-அலைகடல்சூழ் … (௰௫)

வெம்பூவின்முப்பூவினைநிலத்தின்வீறடங்க … … *
ஐம்பூவினையுமயிர்த்திலம்-செம்பிரத் … … (௰௬)

தார்க்குமெவர்க்குமருந்தாதிருந்தாலும் ... ... *
பார்க்கமயக்கும்பசுந்தேறல்-போர்க்குரிய ... (௰௭)

காமனுக்குவச்சிராங்கிகாமனுக்குநிகேதம் ... ... *
காமனுக்குமோகக்கருகூலம் காமனுக்கு ... (௰௮)

ஏமதண்டலோகமுழுதுஞ்செங்கோனடத்தும் ... ... *
சோதண்டதீக்ஷாகுருபீடம் மாதவரும் .. ... (௰௯)

நற்றவருநீதியநாட்டோனுநன்னென்று ... ... *
கற்றகவியின்பக்கலக்கியானம் வெற்றிமதன் ... (௨௰)

மீதிட்டகாமநூல்வித்தைக்கடங்காமல் ... ... *
வாதிட்டபஞ்சவர்ணக்கிள்ளை ஆதித்தன் ... ... (௨௧)

பொங்குகதிர்காணாதபூங்குமுதங்கங்குலையும் ... ... *
திங்களையுங்காணச்செழுங்கமலம் எங்குநில ... (௨௨)

வாகநகைக்குமாரம்பையரின்மேனகைக்கும் ... ... *
யோகநகைக்குங்குலதெய்வம் பாகுமொழிப் ... (௨௩)

பண்ணுநடையும்பழகுமொருசித்திரம்போல் ... *
நண்ணுமதனரசகுளிகை வண்ண ... ... (௨௪)

நெடியதருவிற்படராநீள்வல்லிதாவிக் ... ... *
கொடிபடராக்கற்பகப்பூங்கொம்பு வடிவுமிகு ... (௨௫)

பெண்ணுருவமாகப்பிரவாளங்கிளைத்தமுதல் ... *
மண்ணுலகங்காக்கவருமமிர்தம் எண்ணம்... ... (௨௬)

சிறப்பிக்கமாதவத்தோர்செய்தவங்களெல்லாம் ...
துறப்பிக்கவைத்தபெருஞ்சூழ்ச்சி நிறைத்துப் ... (௨௭)

பெருகியுவட்டெடுத்தபேரின்பவெள்ளம் ... ... *
பருகிற்றெவிட்டாப்பசுந்தேன் ஒருவருக்கும் ... (௨௮)

பூணக்கிடையாதபொன்னுரந்தூரத்தே ... ... *
காணப்பரிமளிக்குங்கஸ்தூரி நீணிலத்தில் ... ... (௨௯)

கொல்லாக்கொடுங்கூற்றங்கூவாமற்கொஞ்சுகுயில் ... *
எல்லார்க்கலைக்குமினியமான்-உல்லாசத் ... .. (௩௰)

(அடி)

தேமேவணிச்சச்செழும்போதெனுமினிய ... *
பூமேனடக்கப்பொருமலோ மாமோகத் ... (௩௧)

தந்தமதநூல்கொண்டமிர்தநிலையாராயும் ... ... *
மைந்தரதிமதுரவாய்ப்பட்டோ முந்துகனைச் ... (௩௨)

செங்கைச்சிலைவேள்திருவடியின்மேல்வைத்தோ ... *
மங்கையர்தங்கையால்வருடியோ பங்கமுற ... (௩௩)

வாட்டியவாசேனைவசீகரிக்கச்செம்பஞ்சு ... *
தீட்டியோகோலஞ்சிவந்ததோ நாட்டம் ... (௩௪)

இகழவகஞ்சிவந்துசெம்பவளக்கொம்பும் ... *
பகருமெழிலிந்த்ராணிபதத்தும் புகழினைஞர் ... (௩௫)

மெத்துமதிசோர்வதற்குவிலமதிபோதாதென்று ... *
சித்தசன்றனாய்ந்துசெய்தமதி பத்தும் ... (௩௬)

பெரிதுவிஜயம்பெறுமதனராஜன் ... ... *
சரித்திரைமறபுஸ்தகமுகந்தாங்கிப்-பரவியே ... ... (௩௭)

ஆதிப்பிரமனைத்தைநறுந்திநடை ... ... *
சாதிப்பிக்குங்கமலத்தாளினாள் மேதினியில் ... (௩௮)

(பரடு)

நானோமடல்விரியுநாளிகேரத்தினிளம் ... ... *
பானைவிரியாப்பசுங்குரும்பை நாளும் ... ... (௩௯)

அவங்கள்புரியாதருந்துறவோர்செய்யும் ... ... *
தவங்கனிறுக்குந்தராசு நவங்கொள் ... ... (௪௰)

இரண்டுதிகராகியெல்லோர்க்குமின்பம் ... ... *
திரண்டவெனவழங்குகின்ற மருண்டமதன் ... (௪௧)

வேதசாரங்குமுறுமின்னூபுரத்துடனே ... ... *
பாதசாலஞ்சூழ்பரட்டினாள் ஆதரவின் ... ... (௪௨)

(கணைக்கால்.)

ஆட்சிமதராஜவிருதத்தணையுமூதாமல் ... ... *
காட்சியிலேபோதிக்குங்காளம்போல் மாட்சியினை ... (௪௩)

மீதார்விழிக்கயலின்மேற்பாயச்சூதொட்டி ... *
வாதாகிநிற்கும்வராலினைபோல் ஊடறுகுயிற் ... (௪௪)

காளமதன்முதுகுகாட்டாமன்மாட்சிபெறத் ... ... *
தோளதனிற்கட்டுகின்றதூணிபோல்-மேவினின் ... (சரு)

பெருத்தகணைக்காலந்தூம்பின்னிடவேமைந்தர் ... *
கருத்தைவருத்துகணைக்காலாள்-ஒருத்தி ... (சசு)

(முழந்தாள்.)

அமையுமிலங்காபுரியிலன்றுசென்றதூதர் ... *
தமையுமருட்டுமுழந்தாளாள்-அமுதுபயில் ... (சஎ)

(துடை.)

அங்கவனுராகவதிமோகசாகரத்தைச் ... ... *
செங்கையுறநீந்துகைக்காந்தெப்பமோ-இங்கிதமாய் (சஅ)

மட்டுபடாவிளைஞர்வாஞ்சைமதயானை ... ... *
கட்டுப்படுமிரண்டுகம்பமோ-தொட்டுமயல் ... (சகூ)

நாட்டுகலவிக்கினியநாடகசாலைக்கழகு ... ... *
சூட்டிமணிமுகப்பின்றூண்களோ-கோட்டிபத்தின் (ருய)

சுத்தத்துதிக்கையோசொல்லுவமையென்றுலகோர் ... *
சித்தத்துதிக்கைசிறப்பித்த-மெய்த்திமிர ... (ருக)

வாரணவேளாலக்கமால்வசந்தமண்டபஞ்சேர் ... *
தோரணவாழைத்துடையினாள்-தாரணியில் ... (ருஉ)

(அல்குல்)

ஆலிக்குவில்வேளமளியிலேயிவ்வுலகில் ... ... *
பாலிக்குமிந்த்ரபதமென்னச்-சீலிக்கும் ... (ருங

புத்திக்குமாலுதவும்போர்மாரன்போக்கமென ... *
வந்திக்கும்பொன்னாலவட்டமெனச்-சிந்தித்துச் ... (ருச)

சூழுமணிதாங்கித்துலங்குகுறங்காமிரண்டு ... ... *
வாழையிடைச்செந்தேனைவைத்ததென-வேழமதன் (ருரு)

காமித்ததென்றல்கரக்கிளறக்காரிகையார் ... ... *
சேமித்தலங்கரித்ததென்னைப்-பூமிக்குள் ... (ருசு)

வண்மைமதனூலொழிபமற்றுளநூல்பொய்யெனவே ... *
உண்மைவிளக்குமுருவமாய்த்-திண்மைபுனை ... (ருஎ)

மாரனரசொழியமற்றோராசிலையென் ...
றூரமயல்பூட்டுமரசிலையாய் - ஈரம் ... ... (௫௮)

தயங்கியபிச்சந்தனம்பியிதழூற்று ... ... *
வயங்குபொழிப்பைந்நாகமாகி - நயந்தூலவி ... (௫௯)

ஓசைமணிமேகலையினூட்கலையினெஞ்சூரான் றாம் ... *
ஆசைபரிமளக்குமக்ருவாய் - ஈசர் ... ...(௬௰)

(இடை.)

குடியாய்ப்பிடியாய்க்கருதியாய்வல்லிக் ... *
கொடியாயினைத்திக்கொப்பாய் வடிவடங்கப் ... (௬௧)

பண்ணிச்சிறையன்பாதாதிச்சமெல்லாம் ... *
கண்ணெச்சிறுத்திநெ - வண்ணமலர்த் ...(௬௨)

தேமருவுமின்றுலெலறுதென்றற்செழுந்தேரில் ... *
மாமதனைவின்றவடிவின்ன - நாமருவு .. ... (௬௩)

மாதுவிளையாடுமுருகைப்புலவர்சொற்பயன்போல் *
சதுதெரியுந்தொரியாதெகேலாய் - மூதறிவிற் ... (௬௪)

பண்டைமொழிபிற்குவிந்தபாதகமேற்பொலவரும் ... *
உண்டிலையென்றுரூபமொக்கிசைத்து - மண்டலத்தில் (௬௫)

மாத்தானைக்காத்தாள்வருணைகுலாதித்தனைச்சென் ... *
றேத்தார்போற்றேய்ந்தவிடையினுன் - நீத்துச் ... (௬௬)

(உந்தி.)

செழித்துவாழில்லறத்தைத்தீதென்பார்நெஞ்சைச் ... *
சுழித்துவாங்குந்திச்சுழியாள் - விழித்தெதிரே ... (௬௭)

(வயிற்றமயிரொழுங்கு.)

உற்றமால்பூட்டுமுதாவடபத்திரத்தில் ... *
சொற்றமாவையள்ளிகொண்டகோலமோ - வெற்றிமதன் (௬௮)

செங்கைச்சிலைநாணோசெங்கோலோகொங்கையெனுந் ...*
துங்கக்களிற்றின்றறிக்கையோ குங்குமஞ்சேர் ... (௬௯)

பொற்புமுலையாமிரட்டைப்பண்டரிகப்போதரும்பு *
நற்புதுமைகாட்டுமொருநாளமோ - அற்புதவேள் ... [௭௰]

ஆர்க்குந்திருநாளுக்கல்குறித்தார் பின்சென்றேட்டம் ... *
பார்க்கப்பிணித்தடணிவடமோ-நீர்க்குமிழி ... [எக]

எந்துமிருகொங்கையிளநீர்கலந்தணிந்த ... ... *
சாந்துபுழுகோ குழந்தாளோ-மாந்தர்மருள் ... [எஉ]

உச்சாயமாமிடைக்குமேற்குடையமாமுலைக்கும் ... *
அச்சாய்ப்பிறந்ததியந்திராசமோ-கச்சாரம் ... [எங]

வன்னத்திறந்தமுலைமால்வல்லாயுதமாதவத்தோர் ... *
திற்நெஞ்சைசேய்யுற்றுமொருசாரமோ-மன்னிப் ... [எச]

புளகவிராமப்பொருவருங்கம்பிரக் ... ... *
களபமுலைச்செவ்விளநீர்க்கம்பம்போ-வளைக்குமியிருல் [எரு]

என்னவிரண்டுகொங்கைக்கிடைவெளியயோதோங்குகின்ற ... *
கன்னலிரண்டின்பத்திக்கதிரொழுங்கோ-என்னவேயன்னவிப் (எசா)

பார்க்கும்பொழுதிற்பலகோடிசொல்லுவமைக் ... ... *
கேற்குஞ்சிறுமோமையைாள்-நீர்க்கயத்துச் ... [எஎ]

(முலை)

சீதவனசத்திரும்மைச்செப்பவாடவ்வருப்ப ... ... *
ஆதவனைக்கண்டாலலருமே-குழாயி ... ... [எஅ]

வட்டென்றுவமைமதிக்கலாட்பட்டதனை ... ... *
வெட்டென்றுசொல்லவிதியுண்டே-நெட்டுடலைச் ... [எகூ]

சக்ரவாகத்லைதச்சரிபுனைக்கலாமதுவும் ... ... *
மிக்கசிறகுடைத்தாய்விட்டதே-ஒக்குமெனப் ... [அய]

பாரப்பருவதலப்பச்சிலதிடுன்னலாம் ... ... *
ஆரப்புளகமருப்பாதே-வீரமறவ் ... ... [அக]

வண்ணமுடியென்றுமதிக்கலாமப்மருட்டம் ... ... *
தன்னெணைவும்வெச்சவுத்தாராதே-பண்ணரிய ... [அஉ]

சித்ரமணிச்செப்பென்றுசெப்பலாமச்செப்பு ... *
புத்தமிர்தம்போகம்பொசியாதே-சுத்தநதிச் ... [அங]

சுந்தரஞ்சேரிபுற்புதத்தைச்சொன்னூற்பணிறுரும் ... *
சந்தனமுங்குங்குமமுந்தாங்காதே-விந்தைதெரி ... [அச]

அந்தநறுங்கோங்கினரும்பெனலாமவ்வரும்புக் ... *
இந்துமுகக்கருமைபெய்தாந்த-சந்தமிகும் ... [அரு]

பூரணகும்பங்களெனப்போற்றலாமக்கும்பம் ... ... *
தாரணியுமொன்னுக்குந்தாராதே-சீரணியும் ... [அசா]

மாகனகவெற்பெனலாமற்றதுவெற்பாரூர் ... ... *
கோகனகக்கையாற்குவிக்குமே-வாருச்சுறி ... [அஎ]

பற்றிணைகளென்றுபகரலாமப்பற்றும் ... ... *
இற்றுறுதலார்கைக்கொடேற்குமே-சுற்றமிகு ... [அஅ]

பூங்கொத்திணையாப்புகலலாம்பூங்கொத்தும் ... *
தேங்குமதன்றன்விசைசேர்கின்ற மாக்கனியில் ... [அகூ]

பக்குவமாமென்றுபகரலாமக்கனியும் ... ... *
மிக்ககனிபோல்விழுக்கிறுமே-தக்கபெரு ... ... [கூய]

மாறுமதயானையிருமத்தகமென்றோதலாம் ... *
பாகர்பிறர்கொண்டாற்பயந்ததே-ஆகையினால் ... [கூக]

வானேமுதலிற்றமண்டலத்திலேசிவன்றித் ... *
தானேதனக்குச்சரியாகி-ஞானமெல்லாம் ... [கூஉ]

கொண்டெடுத்தமோனமுனிவரும்போலாமடக்கத் ... *
தண்டெடுத்துவந்ததனுமாரம்-கொண்டமெல்லுறும் ... [கூங]

மட்டவிழும்பூங்கோதைமாதரார்க்குந்தனக்கும் ... *
இட்டவினைக்கூடாரமெல்லாம் வட்டத் ... [கூச]

திடங்கொண்டுபூரித்திறுமாந்துமுத்து ... ... *
வடங்கொண்டுமென்மேல்வளர்ந்து-தடங்கொண்ட [கூரு]

வட்டவிருமந்தரத்தைமாரிப்பெருந்திறுகக் ... *
கட்டுமணியாணிப்பொற்கச்சுறுத்துக் கிட்டரிய ... [கூசா]

பாளிதமேல்படராமுலாவுப ... ... ... *
லாளிதமோகனராஜசம்-மேளமை ... ... [கூஎ]

ஞெகரகாமவிநோதவிகாரவ ... ... ... *
சீகரகோமளசீதள-மாகி ... ... ... [கூஅ]

வருணகுலாதித்தன்மடல்.

அரும்பிவிரும்பியசைந்துதசைந்து ... ...
நிரம்பிநெருங்கிநெகிழ்ந்து-பரந்து ... ... (௯௯)

சுணங்குநிறைந்துசுகந்தகதம்ப ... ... ... *
மணங்குடிகொண்டுவயங்கி-இணங்கி ... ... (௱)

அருந்தவர்சிந்தையடங்கிமடங்கி ... ... ... *
வருந்தநெருங்கிவளர்ந்து-திருந்தியொரு ... (௱௧)

தீங்குகொள்ளாதசெழுந்தாமரைமுகையின்... ... *
மோதுஞ்சிறுதிவலைமொய்த்தனபோல்-ஓதமரர் ... (௱௨)

வாழக்கடல்கடைந்தமாயோன்மணிமகுடம் ... *
சூழத்தெறித்தசுதைத்துளிபோல்-ஏழுலகும் ... ... (௱௩)

மெச்சுகலைமதியின்வெண்ணிலாவீசுமுத்தின் ... *
கச்சுப்புனைந்தகனதனத்தாள்-இச்சையினால் ... (௱௪)

(கைவிரல்)

ஏத்துகின்றகாமுகர்மேலின்பவேண்முத்திரையைச் ... *
சாத்துகின்றமுத்திரைக்கோறென்னலாச்-சூத்திரங்கள் (௱௫)

டாயிலொருவரறியாவயிர்த்திறலைக் ... ... ... *
கோயிறிறக்குந்திறவுகோலென்னத்-தூயகலை ... (௱௬)

வாசிக்கும்பஞ்சவனக்கிள்ளையில்சிவந்த ... ...*
நாசிக்குநேராய்நகந்துலங்கத்-தேசுற்ற ... ... (௱௭)

பத்ரகரவீரபத்திரமோகோமளஞ்சேர் ... ... *
சித்ரப்பருவச்சினைக்கெளிதோ-மெத்தென்று ... (௱௮)

துய்யபவளத்துவடருகொம்போவென்ன ... ... *
வெய்யமயல்பூட்டும்விரலினாள்-செய்யசெழுந் ... (௱௯)

(உள்ளங்கை)

தாமரையின்போதைச்சலப்படுத்திக்காந்தளெனும் ... *
மாமலரைத்தூரவனத்தகற்றிக்-காமுகர்மேல் ... (௱௰)

வெங்கடுங்கோபத்துடனேவிசிப்புடைத்தாலும் ... *
செங்கழுநீர்ப்பந்தொத்துச்சீதளமாய்-இங்கிதத்து (௱௰௧)

மோகம்பூரிக்கமுடிதுவக்கித்தாளவும் ... ... *
ஆகம்பூரிக்குமகங்கையாள்-ஓகையிசை ... .. (௱௰௨)

(முன்னங்கை)

விண்டிருக்கும்யாழ்களெல்லாம்வெட்கத்திருவுருவம் . *
கொண்டிருக்கும்யாழினியகோடொத்து-வண்டணிந்து (௧௰௩)

சுற்றுநவரத்நந்துலங்குகடகங்களினால் ... ... *
மொய்த்தழகுமாறுதமுன்கையாள்-சித்ரமுலை ... (௧௰௪)

(தோள்)

பூரணகும்பங்களின்மேற்போட்டபெருமாலையென்ன ...*
ஆரணிவில்வேள்பஞ்சணையென்னச்-சீரணிந்து ... (௧௰௫)

கொங்கைமலைமேலங்குரித்தெழுந்து கீழ்வளைந்த ... *
துங்கமணிவேய்போலுந்தோளினாள்-திங்கட் .. (௧௰௬)

(கழுத்து)

சழுகமதராஜன்சுருதியிருநாலாம் ... ... *
குழுகுமெனும்புள்ளோசைகொஞ்சத்-தமரிக்கும் (௧௰௭)

வன்னிக்கும்பாலைமடலவிழுநாள்செல்லும் ... ...*
கன்னிக்கமுகனையகந்தரத்தாள்-முன்னிரவி ... (௧௰௮)

(முகம்)

வந்தால்விகசிதமாய்வண்டுபதந்துவையாச் ... *
செந்தாமரைபோற்றிருமுகத்தாள்-நந்தாத .... (௧௰௯)

(உதடு)

மாபவளமோவிலவோமாதளையோவேல்விழியின் ... *
கோபவளமோயிந்த்ரகோபமோ-சேவைதரும் ... (௧௨௰)

தூதளையோகிஞ்சுகமோதொண்டையோவண்டினங்கள் *
தாதளையுஞ்செங்குமுதத்தன்மலரோ-ஈதென் ... (௧௨௧)

றெவருமுபமானமெடுத்துரைக்கநன்மா ... ... *
தவருமயங்கித்தயங்கக்-குவிபொன் ... ... (௱௨௨)

பொழிந்தருளுந்தென்றுறைசைப்பூபதியைப்போற்றும் ... *
செழுந்தமிழேபோற்செம்மைசேர்ந்து-தொழுந்திருமால் ()

இன்னமொருகாலிருகைவருந்தாமல் ... ... ...*
வன்னமதியமழுங்காமல்-இன்னமிர்தம் ... (௱௨௪)

ஆனவுததியலையாமல்வானவரும் ... ... ... *
தானவரும்வெம்போர்சருவாமல்-நானிலமேல் ... (௱௨௫)

வாசுகியுமந்தரமுமாயாமன்மாருமல் ... ...
ஆசையமுதாறுமதரத்தாள்-வீசுகதிர் ... (௱௨௬)

(நகை)

முத்தாகித்தோகைமுருந்தாகிமுல்லைமுகைக் ... *
கொத்தாகித்தந்தக்குருத்தரும்பி-விஸ்தாரம் ... (௱௨௭)

வாய்ந்தபத்மராகமணியைத்தரம்பிறித்துத் ... *
தேய்த்தொட்டமிட்டுவைத்தசேர்வையெனக்-கோத்துப் (௱௨௮)

பொருதிருபவெள்ளிலையிற்பூங்காவிபெய்ன ... ... *
இருதிரையும்பூங்காவியேறி-உருகிமனம் ... ... (௱௨௯)

பூணநகைக்கும்புகழ்க்கொல்லியம்பாவை ... ... *
நாணநகைக்குநகையினாள்-காணவெதிர் ... ... (௱௩௰)

(சொல்)

தீட்டிவைத்தசித்திரத்தைச்சிங்காரமோகனக்கூத் ... *
தாட்டுவிற்குஞ்செஞ்சொலமிர்தத்தாள்-தொட்டிலயன் (௱௩௧)

(கபோலம்)

மண்ணுடர்விண்ணுடர்வந்தழகுபார்க்கவைத்த ... *
கண்ணாடிபோலுங்கபோலத்தாள்-வண்ணவெழில் (௱௩௨)

(மூக்கு)

கொள்ளுங்குமிழுங்குமிழ்போனிறம்படைத்தால் ... *
எள்ளுஞ்சரியாமிதற்கென்னைத்-தள்ளிச் ... (௱௩௩)

சரமஞ்சரிவிடுத்தகண்ணம்பழித்த ... .. ... *
அருமந்தசீவகனுமஞ்சப்-பெருமணத்திற் ... (௱௩௪)

காமாதுவண்டின்கணத்துக்களர்ந்தறியா ... ... *
ஆமாதவல்லபமுண்டாக்கிவைத்துப்-பூமேவு ... (௱௩௫)

விற்காமன்றேரோடும்வீதியெனச்சந்ததமும் ... ...*
நற்கால்வழங்குகின்றநாசியாள்-பொற்கோதை ...(௱௩௬)

(செவிகள்)

தேன்போதணியுஞ்செழுங்காவிக்கண்களெனும் ... *
மான்போய்வரவிட்டவாயில்போல்-தாம்போதத் (௱௩௭)

தாவப்பொன்னூலதரித்தால்விழிக்கூற்றம் ... ... *
வாவப்பிடிக்கும்வலயம்போல்-பூவுலகென் ... (௱௩௮)

சுத்தமுழுமாணிக்கத்தோடணிந்தாணீலவிழி ... *
யத்தியிருபானுதிக்குமாதவன்போல்-பத்திதரும் ... (௱௩௯)

பைந்தராளத்தோடணிந்தாற்பார்வைச்சகோரங்கள் *
வந்தமுதமுண்ணுமதியம்போல்-புந்தவே ... (௱௪௰)

சாலவழகுதளும்பிவழிந்தொழுகும் ... ... *
கோலமகரக்குழைச்செவியாள்-ஆலவடி ... (௱௪௧)

(கண்கள்)

வேல்போனிறம்படைத்துவீரவாள்போலிரண்டு ... *
சேல்போற்கயல்போற்றிசைபரந்து-மால்போலச் (௱௪௨)

சஞ்சரிகம்போலத்தயங்கிக்கடல்போல ... *
நஞ்சமமுதுநயந்தருளிக்-கஞ்சமெனச் ... (௱௪௩)

செங்குவளையென்னச்சிறந்தகருவிளையின் ... .. *
பொங்குமலரெனவேபொற்பெய்திக்-கங்குலிடக் .. (௱௪௪)

கோலாகலவேள்கொலைப்பஞ்சபாணமெனக் ... *
கேலாவிரகாக்கினியெழுப்பிட-மேலான ... ... (௱௪௫)

தோராவடுவகிர்போற்செவ்விக்குறிபொங்கி ... .. *
மாமாரனென்னாதத்தோடிப்-பூமாதின் ... ... (௱௪௬)

ஆகியரிபோலரன்போலயன்போலச் ... ... *
சோதிகறுத்துவெளுத்துச்சிவந்து-பாதகமும் ... (௱௪௭)

மாயமும்பொய்மையும்வஞ்சகமுந்தஞ்சமிகு ... *
நேயமுஞ்சூதுநினைவுருக்கு-பாபமும் ... ... (௱௪௮)

அத்திரமும்வீறுமதிக்கிரமமுங்களவும் ... ... *
குத்திரமும்போதக்குடிகொண்டு-நித்தமிகல் ... (௱௪௯)

வாதையடர்த்துவரியாரத்துமையெழுதிக் ... ... *
காதையடைந்துகடைசிவந்தே-ஓதுகலை ... (௱௫௰)

கற்றவரையெல்லாங்கருத்தருக்கிக்காமரசம் ... ...*
உற்றவலங்காரமுட்கொண்டு சுற்றும் ... (௱௫௧)

புவிக்குணிகரற்றபுலவோர்தஞ்செஞ்சொற் ... ...*
கவிக்குநிகராகுமிருகண்ணும்-குவித்தமலர் ... (௱௫௨)

சூழளகக்கொண்டலுக்குஞ்சொற்றுநுதற்பிறைக்கும் ... .. *
தாழவொளிருமிந்த்ரசாபமோ-ஆழிவரு ... ... (௱௫௩)

காளமனையகலைச்சங்க்ராமவிழி ... ... ... *
வாளிலுறைகழற்றிவைத்ததோ-வாள ... ... (௱௫௪)

நெருங்குகடலுட்புலப்பநீலநிறப்பார்வைக் ... ... *
கருங்கடலுக்கிட்டகரையோ-பெருங்கடக் ... (௧௫௫)

காமனயிலுங்கயலும்பொருநயன ... ... *
தாமரையின்பக்கத்தரங்கமோ-மாமதனைச் ... ... [௱௫௬]

சித்திரமோகாதிசயஞ்செய்விக்குமாறனிட்ட ... ... *
பத்திரமோவென்னும்படிவிளங்கிப்-புத்திதனை ... ... [௱௫௭]

வாட்டுசிலைவீரமதவேண்மலரப்பு .. ... ... *
பூட்டுசிலைபோலும்புருவத்தாள்-தோட்டிதழிக் ... [௱௫௮]

[நெற்றி]

கொந்தார்சடையோன்குலவுநுதற்கண்போலச் ... ... *
சிந்தூரந்திட்டுந்திருநுதலாள்-அந்தரத்தில் ... [௱௫௯]

[கூந்தல்]

ஒட்டமிடுந்திண்டேருதயமார்த்தாண்டன்மேல் ... ... *
கூட்டமிடுங்கற்குழாங்கொலோ-நாட்டமுறத் ... [௱௬௰]

தேசுபுனைபங்கயமேற்சேர்மதுகரத்திரளோ ... ... *
வீசுமுகமதிதோய்மேகமோ-ஆசைமதன் - - (௱௬௧)

காவணமோகொன்றைக்கருங்கனியோகாயாவின் - - *
பூவணமோமஞ்ஞைப்பயில்பூங்காவோ-தாவுதமிழ் - -[௱௬௨]

கல்லார்மனமோகலவிவிலைவாங்க - - - *
வல்லார்பொருமகளிர்வன்னெஞ்சோ-எல்லாரும் - [௱௬௩]

ஏதென்றதிசயிக்கவிந்த்ரநீலத்தினாறந் - - - *
தாதொன்றிவாசச்சவாதணிந்து-போதொன்றி - [௱௬௪]

நெய்த்துக்கடைகுழன்றுநீண்டுசுருண்டடர்ந்து - - *
மைத்துத்தகரமணம்பொதிந்து-மெய்த்துமணம் - [௱௬௫]

சோறிக்கும்வண்டுஞ்சுரும்புமாடிப்பாடிச் - - *
சாதிக்குநாடகசாலையோ ஓதத் - - - [௧௬௬]

துனிநீரலைபோற்றுறவோரலையப் - - - *
பனிநீரால்வாசம்பரவித்-தனியே - - - [௧௬௭]

வெறும்புகையுநெட்டுயிர்ப்புமேயினைஞர்கொள்ள - - *
நறும்புகையுஞ்சாந்துநயந்து-நிறம்புதிய - - [௧௬௮]

பைத்தளவுமல்லிகையும்பன்னீரும்பாரித்தால் - - *
கந்தரத்திற்றாராகணம்போன்றும்-சந்தமடற் - [௧௬௯].

றண்காலுஞ்செங்கமலஞ்சாத்தினான்மாயவனார் - - *
கண்காண்முகங்கனிவாய்போன்றும்-திண்காதல் - (௧௭௰)

கைவண்ணுருவேர்கலந்தால்வெறிபறக்கும் ... .. *
சைவலத்தின்கொத்துத்தலைபோன்றும்-இவ்வகையே (௧௭௧)

வேரிச்செழுமலரும்வில்வேள்கணைமலரும் - - *
வாரிச்சொருகுமலர்க்குழலாள்-தாரணியில் - - (௧௭௨)

(வடிவு.)

சாதுரியவேதாவுந்தார்குழலாளைப்படைக்க - - *
மாதுரியம்பார்க்கும்வடிவினாள்-ஆதரிக்கும் - (௧௭௩)

(தன்மை)

மையன்மதவேள்வளநகரிசோதனைக்கோர் - - *
தையலுருவாகிவந்ததன்மையாள்-துய்ய - [௧௭௪]

(மலை)

தொடருமழைமேகத்தோய்தலாற்குழப் - - ச
புடவிதனைச்சுற்றும்பொருளால்-படரும் - [௧௭௫]

தளவநகைப்பாவைநரலாமதிக்க - - - *
அளவுபடாதவதனால் கிளருமெழில் - - [௧௭௬]

அம்புலிதோற்றத்தாலைதருநீட்பரப்பால் - - *
விம்பமணிக்குன்றுபலமேவலால்-உம்பரின்மேல் [௧௭௭]

தேங்குவசீகரத்தாற்றின்கோட்டுநாகமே - - - *
தாங்குதலான்மாலைத்தரிக்கையால்-ஓங்கி - - [௧௭௮]

வளங்குலவு நேமிமகராலயம்போல் - - - *
விளங்குருடனியன் விதித்த-வளங்கொள் - - [௧௭௯]

தமிழின்சுவையெனவே தன்குறிஞ்சிச் செந்தேன் - *
உமிழப்ப வளமலையுள்ளோன்-கமழும் - - [௧௮௰]

(நதி)

செழுங்கடுக்கைத் தாராளன் செஞ்சடைபோன் மின்னி - *
முழுங்கித் திசையனைத்து மூடி-ஒழுங்கிக் ... ... [௧௮௧]

கடனீர்பருகிக் கணமுகடேறித் - - - - *
திடநீடுகுன்றச்சிகரத்-தடவீ - - - [௧௮௨]

மேகத்திரள்கால்விழுந்து பொழியமண்ணும் - *
மாகமுமொன்றாகவளர் வெள்ளப்-போமாகமலர் - [௧௮௩]

மானைப்புணரும் வருணகுலாதித்தன் மகிழ்ந். - - *
சேனைப்பெருக்கமெனத் திகழ்ந்து-கானில் - (௧௮௪)

விசைகொண்டு கோலெடுத்து வீசிநடந்தோடித் - - *
திசைகொண்டு காப்பிரஞ்செய்து பசையுந்தித் - [௧௮௫]

தன்குறிஞ்சிவந்தடைந்து சப்பகப்பிடுங்கிவண்டு - *
பன்குறிஞ்சிநந்துகொந்துபந்தறைந்து-தன்குறிஞ்சி [௧௮௬]

சந்தனங்களைந்துமந்திதந்திசிங்கமென்கினங்கள் - *
உந்தியொன்றொடொன்றெதிர்ந்துடைந்தமிழ்ந்த-வந்திரைந்து [

விண்டுமண்டுவிண்டடர்ந்துவிண்டொடர்ந்தகுன்றடைந்து *
கொண்டுநின்றகுங்குமங்கொணர்ந்தெழுந்து-மிண்டுகின்ற [ ]

தந்ததொந்தமென்றுசந்ததங்கழங்குகொண்டமைந்த் - *
அந்தவண்டலெங்குமொண்டடர்ந்துசென்று-முந்தி [௧௮௯]

விளைந்தகருந்தினைசெந்தினைவிஞ்சி - - - - *
வளைந்தபுனங்களைமண்டி-அளைந்து - - [௧௯௰]

வருந்தமனங்குறமங்கையரொன்றி. - - - - *
இருந்தவிதண்களெறிந்து நிரம்பிய - [௧௯௧]

குங்கிலியமுந்திமிசுங்கொண்டோங்கிக்கேகயமும் -
பைங்கிளியுமோடப்பரந்தோடித்-துங்கமுறத் - [௧௯௨

தாங்குமயில்படைத்ததாடாளனைக்கரத்தில் - *
ஓங்குமயில்படைத்தவுத்தமனைப்-பூங்கடம்ப - [ககூங]

மாலையனைவன்டார்மறைமாடபீடத்தின் ... *
மேலயனைக்காவல்வினைத்தானைக்-கோலபதி - [ககூச]

யாறுமுகத்தானையசுரகுலமழியத் ... ... *
தூறுமுகத்தானைதொலைத்தானை-வீறுமலர் - [ககூரு]

வேரிப்பதாம்புயனைமென்குறத்திகொங்கைபடப் - *
பூரிப்பதாம்புயனைப்புண்ணியனைச் சீருற்ற - [ககூசா]

கந்தனைச்சேயைக்கடவுளைச்செவ்வேளையான் ... *
வெந்தனைக்கண்டுமென்மகிழ்ந்து முந்தியெதிர் - [ககூஎ]

பாலவனமேவியதிபாதகவில்வேடரணி - - *
வேலைவடிவாளையலைமேலுவதி-ஓலமிடு - [ககூஅ]

கூபமுறைநரிநெருங்கூடிவிளையாடியதி - - *
தாபவனமேவியழல்சாடி நிறை-மாபுரவின் - [ககூகூ]

காடுகளைக்காரகிலைக்கோலமுருடானகள்ளிக் - *
காடுகளைச்சாய்த்திருப்பைக்காணுகி-நீடுவிறற் [உ௱]

பாராளரைப்போற்பகற்கூறையாடுவார் - - *
போராடலெல்லாம்புறங்கண்டு-சீராகி - [உ௱க]

அந்தரிசிங்கலையம்பிகைசங்கரி - - - *
சுந்தரிவிந்தைசுமங்கலை-மந்தர - - - - [உ௱உ]

பாரபரைபயோதரிபூதரி - - - *
காரணிவாரிணிகாமினி தீரி - - [உ௱ங]

ஓமலைநிமலையரிவைதெரிவை - - *
கமலசரணிகவுரி-குமரி - - [உ௱ச]

வராகிபாலிமஹேஸ்வரிசூலி - - *
புராணிசடாதரிபூவை-தராதலத்தோர் [உ௱ரு]

பன்னியடிவணங்கும்பாலைக்கிழத்தியெனுங் *
கன்னிதழுவக்களிகூர்ந்து நன்னிலமென [உ௱சா]

முல்லைபுகுந்துமுருகுபெருகுநெடுங் ... ... *
குல்லையணிந்துகுழலைந்தி-எல்லையிற்றன் ... (உ௱௭)

மன்றலளகத்துக்கும்வாணகைக்குமொப்பென்று ... *
கொன்றையுமுல்லையுங்கோத்தெரிந்து வென்றி ... (உ௱௮)

திரள்புருவிஞறுகையர்கோன்செங்கைக்கொடைபோல் ...*
சுரபிதனையஞ்சத்துரந்து-குரவையிலே ... (உ௱௯)

மன்றுபொதுவியர்தமாமேகலைவாரிக் ... ... *
கொன்றுநெடுமால்போற்குருந்தேறித்-தண்டலையில் (உ௱௰)

காயாமலர்திக்காரணமென்னென்றுவிடைச் ... ...*
சாயாமுறியாத்தமரித்துத் தூயமலர் ... ...(உ௱௰௧)

வெண்படாத்தைக்களைந்துவேறுபடாஞ்சாத்துவர்போல் ...*
தன்படாவெண்படாஞ்சாத்திப்போய் வண்பரஞர் (உ௱௰௨)

நேரிழைவந்தாளென்றுநெய்பாறயிரானை ... ... *
வாரியெதிர்கொள்ளவந்தவெனப் பாரியெனும். ...(உ௱௰௩)

இசோல்வருணகுலாதித்தன்பாறுகையிலே ... ...*
பாமோர்விருந்தருந்தும்பந்தியெனப்-பேராயர் (உ௱௰௪)

பாடிதனினெய்ச்சாடிபாற்சாடிமிக்கதயிர்ச் ... ...*
சாடிநிமிடந்தனிற்சாடி ஓடிக் ... ... (உ௱௰௫)

கடுங்கானிடைநடந்துகல்லைப்பெண்ணாக்கி ... *
அடுகளவெம்பணியிலாடி நெடுங்கோட்டு ... (உ௱௰௬)

மாமருதஞ்சாய்த்துவணங்குவார்நெஞ்சுறைந்து ... *
தாமமணியுஞ்சகடுதைத்து பூமியெனும் ... (உ௱௰௭)

மின்னையளந்துவிளங்கித்தலைநாளிற் ... ... *
றன்னையும்பெற்றவிருதாள்வணங்கி முன்னி ... (உ௱௰௮)

மருதம்புகுந்துவனசம்புனைந்து ... ... ...*
மருதங்களைந்துவளைந்து கருதரிய ... ... (உ௱௰௯)

எம்பிரான்றேவியெழுந்தருளினாளென்றே ... ...*
உம்பர்கோன்வைத்தவுலப்பையெனப் பைம்பூகத் (உ௨௰)

தாறுபிளந்திருந்தண் கரும்புமஞ்சளிஞ்சித் ... ...*
தேறுங்கருணைச்செழுங்கிழங்கும் உடதிரதத் ... (௨௨௧)

தேமாநறுங்கனியுந்திண்பலாவின்கனியும் ... ... *
மாமாதளையின்வளர்கனியும் ஆமலகப் ... ... (௨௨௨)

பைங்கனியும்வாழைப்பசுங்கனியும்பேரொலுமிச் ... *
சங்கனியும்பொற்றமரத்தங்கனியும் துங்கமலர்ச் (௨௨௩)

சோலைவாய்வன்றிவைத்தசுத்தப்பசுந்தேறும் ... ...*
ஆலைவாய்க்கன்னலெடுபாகும் மாலதியும் ... ... (௨௨௪)

பன்னிருமல்லிகையும்பாளையும்பாதிரியும் ... *
மன்னுங்குவளைமருமலரும் இன்னவகை ... (௨௨௫)

எல்லாம்பாவியிருந்தவிடந்தோறும் ... ... *
உல்லாசமாகவுலாவிவந்து மல்லாடத் ... (௨௨௬)

தான்பெரியோருக்குத்தவிராதியர்போல் ... *
பூம்புசிலைவாவொளித்துப்போர்தாவி சேவிநீ ... (௨௨௭)

வரைபெருங்குமன்னர்களித்தார்க்கநஞ்சீர்த் ... ...*
திரைபெருங்குமன்னனுஞ்செறியப் பரவியே ... (௨௨௮)

நெய்த்தனிலம்புகுந்துநெய்தற்படம்படிந்து ... *
மைதவழும்புன்னைவனஞ்சாய்த்துக்கைதைமடல் (௨௨௯)

சூடிப்புளினமொழுங்கறிப்பெரும்பனையைச் ... *
சாடிப்புளினநீந்தலைவேட்டி நீடேற்று ... (௨௩௰)

மாதரங்கமூந்திவலைவாணரிளம்பருவ ... ... *
மாதரங்கமூந்திவலைவாய்மூகந்து தாதவிழ்ந்து (௨௩௧)

பானலம்புனைந்துவரிபாய்மருஞ்சுபூண்டுவிழு ... *
மீனினங்கள்சிற்றிவலையீசிபொய்ங்கு கானலெங்கும் (௨௩௨)

ஓடிக்கழிக்கரையிலொல்லைப்பெடைக்குருகை ... *
மூடிக்கழித்தலையின்மூழ்கப்போய் நாடிக்கன் (௨௩௩)

டந்தவருணனடிவணங்கிக்காணிக்கை ... ... *
தந்தநரனந்தனைப்புனைந்து செந்தமிழ்க்கு ... (௨௩௪)

மாறுதிசெங்கைவருணைகுலாதித்தனென்று ... *
கூறுமவர்போற்றுதையுந்தப் பேறுணை ... (௨௩௫)

சங்கந்திகழ்நாகைத்தாருவைச்சோரரவர்போல் ... *
பங்கம்புனைந்தபயமெய்திப்-பொங்குடுமாய்த் (௨௩௬)

தேம்பவுமமராபதிருமால்போற்சந்தேற்றிப் ... ...*
பாம்பணையின்மேலிப்படியளந்து மேம்படுசொற் (௨௩௭)

செய்யதமிழ்க்கோவைத்திறம்போற்றுறைபரந்த ... *
வெய்யதிருக்கம்பலைமேயான் ஐயனார் ... [௨௩௮]

[காடு]

அச்சுதனார்சங்கேந்தவமைந்தார்பட்டமதனை ... ... *
மெய்ச்சுதந்துகட்டமைத்தவேந்தனார் தச்சரவில் [௨௩௯]

கண்டுயில்வார்டுதன்னடங்காத்தருள்வார்தீதன்மொழியும் *
வண்டுளவார்சீரங்கமாநகரும் எல்லை ... யோர் [௨௪௰]

வந்திக்குந்தெங்குடந்தைமாநகரும்தேவரெல்லாம் ... *
சிந்திக்குமாமகரும்சோதிநீர் ... ... [௨௪௧]

தைப்பூசமாடத்தருமெய்மனமெனவன்று ... ...*
மெய்ப்பூச்சொன்னவிடைமருதும் ... போற்றும் [௨௪௨]

ஏத்துகின்றகந்தாரூரவணிருவினுறுமாப் ... ...*
ஆத்திமுடியோன்செங்கமாறுதும் வாய் ... ... [௨௪௩]

திருப்பதிகள்ளவெள்ளாற்சீக்கவிந்தசிலம் ... ... *
மருப்பணியுந்தன்மையுண்மலி விருப்புடன் [௨௪௪]

வேந்தர்வினைதழைக்கவேதாகமந்தழைக்க ... ... *
ஆய்ந்தவணிகரறந்தழைக்க-எய்ந்த (௨௪௫)

உழவர்குலந்தழைக்கவுண்ணமியிசையுறும்ப ... ...*
விழவுத்திருநாள்விழாவும் அழகாரும் ... [௨௪௬]

மனுநெறியுஞ்செல்வமும்வளடமிழ்பாராட்டும் ...*
அனுதினமுந்தன்மாசனமும் இனகரனார் ... [௨௪௭]

திண்மைக்குலத்துதித்தசெம்பியர்கோமான்புரக்கும் ...*
வண்மையுடைச்சோழவளநாடன் பண்மருவும் [௨௪௮]

[நகர்]

பாடலுநாடகசாலையும்பைந்தொடியார் ... ... *
ஆடலுமாருஞ்சிலைவாலயமும் நீடி ... [௨௪௯]

பணிக்கோபுரந்தோரணமும்பைம்பொன்மதிலும் ... ... *
மணிக்கோபுரமுமடமைவைப்பும் கணைச்சாயர் ... [௨௫௰]

கூட்டமுழுத்தமிழில்கோதாட்டுநல்விருந்தில் ... *
தேட்டமும்பாராட்டுஞ்சீராட்டும் சேட்டு ... [௨௫௧]

வனசத்திரமுகட்பமாமறையோர்க்கெல்லாம் ... *
தினசத்திரமுதவுஞ்சீரும் அனத்தில் ... ... (௨௫௨)

குலந்தாமரைமேற்குலாவுங்குளமும் ... ... *
நலந்தான்பெருக்குநதியும் அலர்ந்த ... ... (௨௫௩)

அளகாபுரியுமமோகனூரும் ... ... ... *
பளகாகச்செல்வம்பரித்து வளமேவும் ... ... (௨௫௪)

செந்நெலும் பூகமுந்தின்கரும்புஞ்சந்தனமும் ... *
பன்னுவளநாகைப்பதியினான் ஒன்னலாச் ... (௨௫௫)

(மாலை)

சாடுகின்றவேல்வீரன்றன்மார்பனுதினமும் ... *
சூடுகின்றவாகைத்தொடையினான் கூடலரைப் (௨௫௬)

பேயுங்கழுகும்பெருவிருந்துகொண்டாடப் ... *
பாயுங்கவனப்பரியினான் ஆயும் ... ... (௨௫௭)

(யானை)

அருந்தமிழோர்சொற்படியேயாறுதப்பும்பாரைப் ... *
பொருந்திமதமுன்றும்பொழிந்து-இருந்தார் ... (௨௫௮)

படைக்கடலைத்தூளாக்கிப்பாகரைக்காய்ந்தோடி ... *
நடைக்குமனவேகமெனநாடி இடிக்கும் ... (௨௫௯)

உருமேறெனமுழங்கியொன்பான்முழம்பெற் ... ... *
றருமேகநீரையருந்தி வருமேரு ... ... (௨௬௰)

என்னவரிவண்டினந்தொடரக்கோபமே ... *
மன்னுமயிராவதத்தினான் மன்னி ... ... (௨௬௧)

(கொடி)

இலகுகடற்பாரிலெதிரில்லையென்றே ... ... *
குலவுமகரக்கொடியாகீ நிலைமைபெறும் ... [௨௬௨]

[முரசம்]

ஈகைவலுவைசயமென்றேகன் முன்றிலிடை ... *
போகஞ்செய்முன்னுமுரசிருகீ நாகமதி ... [௨௬௩]

[ஆணை]

கூடுகின்றசெய்யசடைச்சோதியாரம்பலத்துள் ... *
ஆடுகின்றநாதர்திருவாணையாகீ நீடும் ... [[illegible]]

கடலுக்கரசன்கனங்குழலார்திட்டும் ... ... *
மடலுக்கிசைந்தவடிவன் அடலுக்குத் ... ... [௨௬௫]

தோற்றியவேல்வேந்தர்தொல்லிருசெலாபிமைப்பில் ... *
மாற்றியவீரவடிவாளிருவ் ஏற்றுக் ... ... [௨௬௬]

கொடியாலறனக்குக்குலக்கொடியைநல்கி ... ... *
வடியாப்புகழ்படைத்தவள்ளல் படியாளும் ... (௨௬௭)

கோமானெனவாழ்குருகுலசேகரர்கோத்திரத்தில் ... ... *
மாமாலனையமனுத்துங்கன் பூமீது ... ... [௨௬௮]

மண்டலிகர்கொண்டாடியானைகுலசீலபாரன் ... ... *
தண்டமிழ்வல்லோர்க்கிடையைத்தாங்குவோன் மண்டலத்தில். [ ]

தஞ்சமெனவந்தோரைத்தப்பாமலெப்பொழுதும் ... ... *
அஞ்சலெனக்காக்குமபயத்தான்-கஞ்சத் ... [௨௭௰]

திருவளருமார்பன்திருமலைராய ... ... *
வருணைகுலாதித்தமகிபன்-காபி ... ... [௨௭௧]

அனையதிருப்பேரணவநியிடாத்தியாக ... ... *
கனகவனசகரத்தான் அனவரதம் ... ... [௨௭௨]

கோனேரிராசவருணைகுலாதித்தன் ... ... *
தானுபாணசயதுங்கன் தேனுருப் ... ... [௨௭௩]

தாரான்கிளைதழைக்கத்தந்ததிருப்புதல்வன் ... ... *
வீராகரனுனவேற்கரத்தான் சீரார் ... ... [உஎச]

வருணகுலாதித்தனுக்குமைந்தனெனவாழ்வு ... ... *
தருமபிராமன்சனகதாரு-திருமருவும் ... [உஎ௫]

வள்ளலனையகொடைமங்காமர்த்தாத்தானுக் ... ... *
குள்ளதிருத்தமையனுந்துங்கம்-தெள்ளும் ... (உஎசு)

இருமரபுந்தூய்யாணியவிசைகள்வல்லான் ... ... *
ஒருமொழியேசொல்லுமுதாரன் பொருசமரில் ... (உஎஎ)

வாங்குசிலைவிசயன்மார்த்தாண்டன்வாளபிமன் ... ... *
ஓங்குமன்னமாவெளிருதயன் றீங்குறெறி ... (உஎஅ)

சொல்லாபாக்கிளைக்குச்சரிலன்றூதன்ட ... ... *
வில்லாளன்மயக்கணீற்றுமேம்பாலன் சல்லாப ... (உஎகூ)

மாதிருகன்றுமனமுந்நிறைகொண்ணும் ... ... *
பூதரவீரபுசத்திறன் ஒதும் ... ... (உஅ0)

தரணிபரிபாலன்சமரமுகவீரன் ... ... *
கருணைபரிமளிக்குங்கண்ணுன் பாவும் ... (உஅக)

அடுத்தவருக்காதாரனன்னெசந்திரசோமன் ... ... *
கொடுத்துவழிகாட்டுங்குரிசில் தொடுத்துவிடும் ... (உஅஉ)

பூந்தாமரைமுதலைம்பூவாளியுந்திரும்பும் ... ... *
ஏந்தாதசெவ்வியெழிற்காமன் மாந்தாதா ... (உஅ௩)

ஆருந்தரிசித்தளவேயவரவர்தம் ... ... *
பாரம்பரையறியும்பண்பாளன் றீரன் ... ... (உஅச)

அனகனபயனமலனசலன் ... ... ... *
கனகசரணகமலன் றினையும் ... ... ... (உஅ௫)

மதுரமொழியுமரபுமினிய ... ... ... *
சதுரவிரகசரசன் அதுலன் ... ... ... (உஅசு)

இளமைவயதிலியலுமிசையும் ... ... ... *
வளமைபுணையுமகிபன் அளிகொள் ... ... (உஅஎ)

தருமபுரிமைதகுதிமிகுதி ... ... ... *
அருமைவரிசையமைவு பெருமை ... (௨௮௮)

உடையவினியவுலகிலெல்லாரும் ... ... ... *
அடையவிழையுமழகன் மடலிதழித் ... (௨௮௯)

தாமச்சடிலனம்புசாதசரணனென்று ... ... *
காமப்பயலைவென்றகாளகண்டன் தேறுமற்று ... (௨௯௦)

மாலைக்குழலிபங்கன்மானைக்கையிலணிந்த ... .. *
கோலப்பரமனன்புகூர்துங்கன் மேவிட்ட ... (௨௯௧)

கோரக்கடினகும்பகோலத்திகடருங்க ... ... *
வீரச்சமரதந்திமேலுதயன் நேருற்ற (௨௯௨)

சற்புருஷமேருவரசர்க்குமணவாளனிறை ... ... *
அற்புதசொரூபனகிலப்பிரியன் நற்பதுமை ... (௨௯௩)

ஒக்கவிளையாடுமவனுத்தமகிர்பாசிதன் ... ... *
மைக்கொடைகுலாவுமொருவச்சிரதரன் மிக்கதொரு ... (௨௯௪)

துட்டகுலகாலனொருசொற்கபடிலாதிருபன் ... *
வட்டவுலகாளுமகிலப்ரபலன்-கட்டளைசேர் ... (௨௯௫)

வள்ளலிருபத்திரண்டாகமாநிலத்தோர் ... ... *
எள்ளரியசீமூதமெட்டாகத் தெள்ளுதரு ... (௨௯௬)

ஆறுகச்சங்கத்தாளைம்பதின்மராகமதி ... ... *
வீறுகவந்தாதித்தவெல்வீரன் பேரும் ... (௨௯௭)

அருணனெறிசேகரத்தானச்சுதராய ... ... *
வருணகுலாதித்தமகிபன்-கிரணமிகும் ... (௨௯௮)

கார்மதித்தநற்கொடையான்காதலுடனேசக்ர ... *
பார்மதித்தநாலகப்பசுங்காவில் ஏர்மதித்த ... (௨௯௯)

(காட்சி)

பொன்போன்மரகதம்போற்பூமயில்போல்வானுலவு ... *
மின்போற்றாளவிளக்குப்போல் அன்போல்வார் ... (௩௦௦)

ஆருயிர்போற்றெய்வரம்பைபோலவென்றும் ... ... *
சூரின்மகளிர்சுவடுபோல் கூரியவெவ் ... ... (௩௦௧)

கண்போற்கவுஸ்துவம்போற்காகோதரநாட்டில் ... *
பெண்போலொளிரும்பிரவாளம்போல் நண்போதும் (௯௱௨)

சித்ரமுயிர்பெற்றசெயல்போல்விசித்திரம்போல் ... *
அஸ்த்ரமதன்செங்கோலரசுபோல் முத்திறமாய்த் ... (௯௱௩)

தோய்ந்ததமிழின்சுவைபோலரன்விழியால் ... ... *
சாய்ந்தவரசுதழைக்கவே-தோய்ந்துவரும் ... (௯௱௪)

எந்திழைபோன்முக்கனிபோல்வேளைமுதுபோல்மதுரம் ... *
சாய்ந்துநறுங்குழற்கீழ்த்தள்ளாடவத்தும் ... (௯௱௫)

இரண்டுகுடம்போலுமிருதனத்தைத்தாங்கி ... *
மருந்தனையவன்பெருந்த-நெருங்கிவற்று ... (௯௱௬)

திம்பாகைக்கல்லுநெடிதுயிர்த்துத்தெய்வமே ... *
ஒப்பாரில்வத்தவிபராவென்று-பொற்பாமென் ... (௯௱௭)

பொருஞ்சங்கலங்கிநினைவழியும்வேளையினில் ... *
கஞ்சமலரடியுங்கண்மணியும்-தஞ்சமெனை ... (௯௱௮)

அஞ்சல்புரியவருதாரகமாக ... ... ... *
வஞ்சமறமகிழ்ந்துவாய்புதைத்து விஞ்சவுறும் ... (௯௱௯)

தேனைமதனதிரவியமேசெங்கமல ... ... *
மானேயனுராகவல்லியே காணேறும் ... (௯௱௰)

கொந்தளகபந்திகுலைந்தாடக்குன்றினிமிர் ... ... *
சந்தளவுபாரஸ்தனமாட உந்தியெழும் ... (௯௱௰௧)

வள்ளையிருதன்னடின்மகரக்குழையாடப் ... ... *
புள்ளையவேற்கண்புரண்டாட மெள்ள ... (௯௱௰௨)

மருங்குலொசிந்தாடமணிவடங்களாட ... ... *
அருங்கமலமாமுகம்வேர்வாடப் பெருங்கழங்கோ ... (௯௱௰௩)

டம்மனைபந்தாடியடியேன்மருண்டாட ... ... *
இம்மனையிலாடியவிருக்கத் தொம்மென்று ... (௯௱௰௪)

வட்டத்திற்பாடிமணிபூசலாடுவீர் ... ... *
இட்டத்திலேயிருக்கவெண்ணீரோ துட்டமத ... (௯௱௰௫)

அம்புருமதுவிழியம்புமிகப்பொருதால் ... ...*
நம்புமடியேற்கதுநன்றுதலே-கொம்பிற் ... (௩௱௰௬)

குயிலாமெனடிதுகொதிக்குமதிக்கோடை ... ... *
வெயிலால்வெதும்பிவிடவோ-புயலார் ... (௩௱௰௭)

உமதுகுழற்காவனத்தினுற்றநிழற்கீழ் ... ... *
அமையுமிடந்தந்தருளீர் எமைமருவிக் ... (௩௱௰௮)

கொங்கையானைக்கோட்டாற்குத்தாமற்சித்தசனூர் ... *
வெங்கையானைக்கிடுதப்பேம்பாடோ-திங்கண்முகம் (௩௱௰௯)

காட்டினீர்நாளுமதுகண்டேன்மயல்பூட்டி ... ...*
வாட்டினீரென்னைமறந்துசெய்தீர்-காட்டுக் ... (௩௨௰)

கெழித்தநிலவாக்கினீரென்வசமாயன் ... ... *
குழைத்தமரமானேன்கொடியேன்-மழித்தோர் (௩௨௧)

அருள்வசனங்கூறுவதுமதிப்பூவாமோ ... ...*
மருள்வசனம்பாண்மொழிதன்மாண்போ-பொருளே (௩௨௨)

மொழியீர்மொழிந்தால்வாய்முத்துதிருமோதற் ... *
பழியீரதனாலனங்கே-செழியீர் ... ... (௩௨௩)

மதனுபதேசம்பண்ணிவாழ்விப்பீரொன்றன் ... *
விதனமெலாமாறிவிடவே-முதலாப் ... (௩௨௪)

பணிவாருக்காசைநெடும்பாம்புவிஷங்கொண்டால் *
மணிவாய்மருந்துதவமாட்டீர்-தணியாத ... (௩௨௫)

வல்லிரும்புகல்லுவயிரமொவ்வொன்றுக்கிளகும் *
புல்லிருந்துவிழிபுதைப்படினும்-வல்லமையால் ... (௩௨௬)

எப்படிசொன்னலுமிளகாதுமதுமனம் ... ...*
மைப்படியுங்கூந்தன்மடந்தையே-இப்படியில் (௩௨௭)

உன்னெஞ்சமென்னெஞ்சாயுற்றுநடுநடுங்கும் ... *
என்னெஞ்சமுன்னெஞ்சாயெய்தாதோ-முன்னம் (௩௨௮)

உடுக்கையிழந்தவன்கைபோலவாங்கே ... ... *
இடுக்கண்களைவதாநட்பென்-றெடுத்துதிரு ... (௩௨௯)

வள்ளுவனார்சொன்னகுறள்வாராதோவந்தக்கால் ... ✳
எள்ளளவுநெஞ்சமிரங்காதோ-கள்ளமதன் ... (௫௫௰)

செங்கோலுமாக்கினையுஞ்செல்லுமோநீதுணிந்தால் .. ✳
வெங்கோலனைகமுறைபாவையே-இங்கேதான் ... (௫௫௧)

தாதத்வஞ்சொன்னேனேதாங்கவோநீர்நினையீர் ... ✳
ஈதத்தவிர்ந்தநினைவின்பமோ-சீதனித்து ... (௫௫௨)

வாசமிலாக்காரும்வணம்விளர்த்துத்தேய்பிறையும் ... ✳
பூசலிலேதற்குனியாப்பொற்சிலையும்-ஆசனவும் (௫௫௩)

தைந்துப்பிழைக்கறியாத்தன்னைவியிலாவேலும் ... ✳
வைத்தபயத்தினுறுவள்ளையும்-மொய்த்தநறை ... (௫௫௪)

கூடியமென்சிற்றிளங்கால்கொண்டமிலாக்குமிழும் ... ✳
ஆடையமுதுதவாவரம்பலும்-வாடிக் ... (௫௫௫)

குவிந்தலருந்தாமரையுங்கோடுமுகச்சங்கும் ... ...✳
அவிழ்துவளேவெய்துமமையும்-சிவந்தகுறி ... (௫௫௬)

காட்டவறியாதகாந்தளுங்குங்குமச்சே ... ... ✳
ரூட்டப்புளகித்தறியாத-கோட்டானைக் ... (௫௫௭)

கோடுமொருவழியிற்கூடாக்கரும்பாம்பும் ... ✳
பாடுகருதாதவடபத்திரமும்-ஆடவர்கள் ... (௫௫௮)

தர்க்கமனம்வேருவித்தாஞ்சுழல்வேநிலையாய் ... ...✳
நிற்கவறியாதநீர்ச்சுழியும்-விற்கோன் ... ... (௫௫௯)

நிலைப்பாடுமேவாதநேரிழையுருண்டு ... ... ✳
செலப்பாகலாயுடையதேரும்-கொலைக்குரிய ... (௫௪௰)

வாழையுங்காலூவிலையில்விழுமென்றும் ... ... ✳
தாழும்வராலுஞ்சரிகுறையில்-வீழும் ... ... (௫௪௧)

அரசுமடிபட்டுத்தளர்பந்துஞ்செம்மை ... ...✳
இராதவியற்கூர்மத்தெழிலும்-பராமரித்தே ... (௫௪௨)

பத்துமதியும்பலவடுவாய்க்காயாமல் ... ... ✳
மத்தியத்தில்வந்தவுமாந்தளிரும் மொய்த்துமலர் .. (௫௪௩)

நீண்டகுழனெற்றிநெறிபுருவங்கண்காது ... ... *
காண்டகையநாசிவாய்கந்தரந்தோள் பூண்டகரம் ... (௱௪௪)

கொங்கையுரோமங்குளிருதரமுந்தியிடை ... ... *
தங்குறிதம்பங்கணான்றண் முழந்தாள் - துங்கக் ... (௱௪௫)

கணைக்கால்பரடுகுதிங்கால்புறந்தாளின்பம் ... ... *
கணைக்குமெழிஉள்ளங்கால்கட்கே-இணைக்கிட் ... (௱௪௬)

பெரியோர்களெல்லாரும்பேசுமருள்போல் ... ... *
சரியோதவென்றுந்தருமோ-அரிவையே ... (௱௪௭)

ஓடாதமானேயுலையாதசெம்பொன்னே ... ... *
வாடாதபூவேமரகதமே-தேடக் ... ... (௱௪௮)

கிடையாதபஞ்சவனைக்கின்னேயேகோது ... ... *
படையாதபுல்லகண்டபாகே-நடையாரும் ... (௱௪௯)

சித்திரமேகாமன்றிரவியமேமோகநற்ச ... ... *
முத்திரமேகட்டாணிமுத்தமே-அஸ்திரமேவன் ... (௱௫௰)

ஆகமமேவாழ்வேயரசேயதிமதுர ... ... *
போகமேயான்செய்தபுண்ணியமே-மோகினியே (௱௫௧)

கன்னேவிரகக்குருவமேயமுதப் ... ... *
பென்னேகலவிப் பிரதாபமே-ஒண்ணுதலே ... (௱௫௨)

கேகயமேயென்றென்றுகீர்த்திப்பேன்வாழவுனு ... *
ராகதியாகத்தந்தாலாகாதோ-வேகமதன் ... (௱௫௩)

காவிக்கணையுங்கருப்புவில்லுந்தீர்த்தால் ... ... *
சேவித்துலகையன்றிச்சேர்வேனோ-பூவுலகில் ... (௱௫௪)

சொன்மருவுநின்கொங்கைத்துர்க்கத்திலென்னைவைத்தால் ... *
மன்மதனார்சொல்லவசமாவேனோ-பொன்மயில்போல் (௱௫௫)

நின்றயானேநீநிலமேனேநின்றபதம் ... ... *
கன்றுமென்னுளிகன்றதோ-ஒன்றியமா ... (௱௫௬)

மாத்திரையின்பமகிழ்ந்தெனக்குப்பாலித்தென் .. *
கோத்திரமெல்லாமழைமைகொண்டகுளிர்-புத்திகமும் (௱௫௭)

தேனைப்பிறக்குஞ்செனனமெலாம்யானடிமை ... ... ※
தானேயென்மேற்றிருக்கண்சாத்துமவீர்-மானேயயீர் (௱௫௮)

சாத்தானைமார்பிற்கமலாசனத்திருவைச் ... ... ※
சேர்த்தவருணகுலாதித்தனைச்சென்-றேத்தி ... (௱௫௯)

மகராசனென்றுனாக்கமாட்டாதார்செல்வம் ... ※
நிகராமோவாவிபத்திரனைத்தான்-இகலாதி ... ...(௱௬௰)

மோனமேபண்ணிமுனிந்திருந்தால்வீணிலே ... ※
போனநாண்மீண்டிவரப்போகுமோ-தேனனையீர் (௱௬௧)

மாகோபமுண்டேலெனமார்மீதுந்தோண்மீதும் ... ...※
ஓகோதான்கொண்டுதைக்கவொண்ணுமோ-கோகிலத்தில் (௱௬௨)

மன்றனைவைத்தாலும்வையுமினியுமானை ... ... ※
என்றனைக்கோபமெனக்கில்லை-மின்னனையீர் ... (௱௬௩)

நற்றிக்கண்ணேறுகொண்ட நற்கனிவாயூறலிலே ... ※
சற்றுத்தொட்டுத்தெளித்தாற்றும்வாமோ-பொற்றொடியீர் ( )

செரீர்பவளத்திருவாய்மலர்ந்தொருசொல் ... ...※
தாரீரானந்தத்தனிப்பாரீர் வாரீரென் ... (௱௬௫)

றுள்ளமிளகியுருகுகின்றவென்னளவில் ... ... ※
எள்ளளவுநெஞ்சமிரங்காமல்-மெள்ளவே .. (௱௬௬)

இத்தனைநேரந்தனியேயாருவாக்கும்விண்ணப்பம் ... ※
அத்தனையுங்கேட்டுங்கேளாதவர்போல்-கொத்துமலர் (௱௬௭)

பூட்டுசிலைமாரன்பொரநிற்கிறனென்று ... ... ※
காட்டுதல்போற்சற்றேகடைக்கணித்துக்-கேட்டுமிக (௱௬௮)

வின்முறுவல்செய்துவிளையாடித்தம்பியே ... ... ※
புன்முறுவல்செய்தருளிப்போயினார்-மன்மதனும் (௱௬௯)

வெங்காதல்பூணும்வெகுராசநடையும் ... ... ※
சிங்காரப்பின்னழகுஞ்சேவித்தேன்-மங்கைநல்லார் (௱௭௰)

மண்ணிலேதோயவடிவைத்தசுவடத்தனையும் - ※
கண்ணிலேயொற்றியொற்றிக்காமுற்றேன்-ஒண்ணுதலார் (௱௭௧)

நின்றநிலையுநெறித்தபுருவக்கடையும் ... ... ... *
மன்றலளகஞ்செறிந்தமாலையும்-பொன்றவெனைப் [௩௭௨]

பார்த்தபார்வைக்குட்பசப்பும்பசுந்தோளில் ... *
போர்த்தபோர்வைக்கடங்காப்பூண்முலையும்-சேர்த்தவனை [௩௭௩]

வாட்டுகின்றசெந்தாமரைமுகமுங்கஸ்தூரிக் ... ... *
கோட்டுநுதலிற்றுவேர்வும்-தோட்டுமலர்ப் [௩௭௪]

பூங்காவில்வந்தபுதுமையுமென்கண்ணைவிட்டு ...
நீங்காமலுள்ளறிவுநீங்கினேன்-ஓங்குதுயர் ... [௩௭௫]

கொண்டேன்விலையென்கொடியிடமாய்வந்தபலன் *
கண்டேனிதயங்கலங்கினேன்-அண்டமெதிர் [௩௭௬]

காணத்தவஞ்செய்தகண்போமற்றைம்பொறியும் ... *
பேணத்தவஞ்செய்யப்பெற்றிலேன் - நாணமுறு [௩௭௭]

குன்றினைத்தன்னுடைக்குலைந்தேன்றனைவிழுந்த ... *
அன்றிற்போல்வாடினேனவ்வளவில் - ஒன்றறியாப் [௩௭௮]

பித்தனிவனென்றெனக்கோர்பேருண்டேயாதலினும் . *
இத்தனிவனென்றுநினைவுற்றுச் - சித்தசன்றன் ... [௩௭௯]

தண்டாறுதல்விழியாற்றான்பட்டகண்கலக்கம் ... ... *
உண்டானவெல்லாமுளத்தெண்ணித்- [illegible]ண்டொருநும் [௩௮௰]

துங்கவுலகிற்கரும்பையெல்லாநாணுச்சிச் ... . *
செங்கரும்பையெல்லாஞ்சிலையாக்கி- வெங்கலைக ... [௩௮௧]

மாகவனத்தோடேவளருமசோகமெல்லாம் ... ... *
சோகவலமாகத்துணர்பறித்துச் - சேகரித்து ... (௩௮௨)

முல்லையெனும்பேரின்முழங்கிசையும்பூமியும்விட் ... *
டெல்லையிற்பூவெல்லாமெடுத்தேந்தித் - தொல்லையனுக் (௩௮௩)

குந்திக்கமலமலரொன்றளித்துச் செந்திருவை ... ...*
வந்திக்குநாகையர்கோன்மார்பிருத்திச் - சந்திக்கும் (௩௮௪)

கோகனகமுள்ளவெலாங் கொய்திரதிகண்போல்வ *
ஆகுமலர்மாவினலர்பறித்து - வாகையிற்போர் (௩௮௫)

ஆடிவிசயம்புனையவும்பாக்கித்தானனந்த ... ... *
கோடியுமாருயங்கொண்டெய்தி - நீடுலகில் ... (௫௮௬)

ஒப்புருப்பாவியுடலத்தனைத்தனைக்கோர் ... ... *
அப்புருத்தாணிதிகராக்கினேன் - மெய்ப்படவே ... (௫௮௭)

நொந்தேன்பாதவித்தேனேக்கினைகாமாக்கினியால் ... *
வெந்தேனுள்ளாவிவெதும்பினேன் - நைந்தேன் .. (௫௮௮)

விழுந்தேனயர்ந்தேன்மெலிந்தேன்தவித்தேனையும் ... *
அழிந்தேன்பரவசமேயானேன் - செழுங்கட ... (௫௮௯)

நெஞ்சிற்கருணையில்லாநிஷ்டூரியார்தம்மை ... *
வஞ்சக்கனைவில்வரக்கண்டேன் - செஞ்சிலம்பு ... (௫௯௰)

கொண்டவிருதாண்மலைக்கும்பிட்டேன்வெப்போனைக் *
கண்டகமலம்போற்கனிகூர்ந்தேன்-தெண்டிலொரூழ் (௫௯௧)

நீதியுலகத்தனிலேதிரேகபங்கயனெடுத்த ... ... *
ஆதுலர்போற்பெருவகையாயினேன்-தீதினெறி ... (௫௯௨)

சேரும்வருணைகுலாதித்தனையேசேர்ந்துகனி ... *
கூருமவர்போற்குறைவற்றேன்-ஆரத்தின் ... (௫௯௩)

வண்டலணிகொங்கைகளைவாழ்த்தினேன்மங்கைநல்லார் *
கெண்டையினைவிழியைக்கீர்த்தித்தேன்-அண்டையிலே (௫௯௪)

சென்றேன்பாராமுகமோதேவரீர்விண்ணப்பம் ... *
ஒன்றையதுகேட்கவொண்ணாதோ-இன்றுமைநான் (௫௯௫)

சற்றேயொருவார்த்தைசம்பாவித்துக்கொள்ளப் ... *
பற்றேறுசொல்லாயணிமொழியீர்-பொற்றொடியீர் (௫௯௬)

எந்நேரமுமேநீரோவினைதுகேட்டமது ... ... *
பின்னேதிரிந்துபிழையேனோ-என்னுடைய ... (௫௯௭)

மேதகையநெஞ்சின்விழிவேல்வினைத்துவரும் ... *
காதனிறைக்குங்களஞ்சியமே-தூதுபயில் ... (௫௯௮)

சேவிலகுகண்ணிமோசெப்பீர்முக்காற்சமர்த்துக் ... *
காவெலிமைவேண்டாவோகாரிகையீர்-ஏலமலர் * (௫௯௯)

ஏரிலங்குபூங்குழலீரென்னருமையென்பெருமை .. *
ஆரறிவார்நீரறிவதல்லாமல்-நீரோதீ ... ... (௨௱)

தெளித்தாலுமாறாச்செழுங்காமச்செந்தீ ... .. *
அளித்தால்வலக்காரமாமோ-களிக்கும் - - (௨௱௧)

தவமேலாகருமயங்குந்தாமநகையீர் - - *
நவமேலாநுவலொன்றுஞ்சொல்லீர்-நவமாம் - (௨௱௨)

விழிபாயவேனொந்தேனெல்லநல்லீருந்திச் - - *
சுழிபாய்வேனென்னாநுதிசொன்னேன்-தழுவும் (௨௱௩)

பொருவான்விழியாரப்போதுமுகப்பார்த்துத் - - *
திருவாய்மலர்ந்துநகைசெய்தார்-பெரிதுங் - - (௨௱௪)

இதுவேதருணமெனவெண்ணியிடந்தேடி - - *
மதுவேறுபூங்காவனத்தில்-உதவியதோர் - - (௨௱௫)

வானமணிவசந்தமண்டபத்திற்பூங்குழலின் - - *
பானமணங்கமழும்பந்தரிட்டு-தேனை - - (௨௱௬)

எடுத்துவகைவகையாவெல்லேயில்லாமல் - - *
தொடுத்துச்சிலபூச்சொரிந்து-விடுத்தமல்லி - (௨௱௭)

பாயல்படுத்துப்பரிமளப்பூமெத்தையின்மேல் - - *
ஆயவிரித்ததன்மேலாங்கவளைச்சேயபதம் - (௨௱௮)

கன்றமதற்கொண்டேத்திக்கைகட்டிவாய்புதைத்து - *
நின்றேனிருதாளைநீட்டினார்-சென்றதக் - -(௨௱௯)

காலகொண்டுபற்றியிருகையாரத்திண்டியனை - - *
மேல்கொண்டுநானுமங்குமேவினேன்-மால்கொண்ட [௨௱௰)

மைக்குழலைநீவிவகிர்த்துவகிர்த்ததிலே *
தக்கமதுமாலையெலாஞ்சாத்தினேன்-மிக்கபணி [௨௱௰௧]

நீரிற்குழைத்ததிறக்குங்குமக்குழம்பைப் - - *
பூரித்தகொங்கைகளிற்பூசினேன்-வேரிமல - [௨௱௰௨]

ரிற்பூவையன்னார்க்கிதவியகாய்ச்சுண்டையுடன் - *
கர்ப்பூரதாம்பூலங்கைகொடுத்தேன்-அற்புதமாம் [௨௱௰௩]

பாதிச்சுருளெனக்குப்பாலித்தப்பிர்தநிலை - *
சோதிக்கலிலைதொடங்கினார் -நீதமலர் - [சா௰ச]

மட்டிமேலேதாய்குழலார்மாமேகலைநெகிழ்த்த - - *
மட்டிலேயென்னைமறந்தேன்யான்-கட்டிமலர்க் [சா௰ரு]

கைக்குளனைத்துக்கரணக்கட்டளைவட்டத்துறையிற் - *
புக்கொருமித்தெட்டுவகைப்புட்குரலிட்-டொக்கவெடுத் [சா௰கா

தப்புறமுற்றிப்புறமுற்றுப்புவிளைத்துப்பரிவைச் - *
செப்பிநகத்திற்குறியைச்சிக்கெனவைத் தொப்பிலெழிற் [சா௰எ

பற்குறியிட்டுக்கருணைப்பதமுகப்பொற்பொளிரப் - *
பொற்குவடொத்தப்புணரப்புத்தமிர்தத்-திற்குலவிச் [சா௰அ]

சற்றிளகிச்சற்றிறுகிச்சக்ரதலத்துக்குளிலக் - *
கற்றமைநீர்த்தொத்தனைக்கச்சவிழப்-பொற்பு - [சா௰கூ]

ப…குத்…லைக்கன்னவிரற்கொடுதாக்கி - - *
நகத்…றுத்திநகைத்து-முகத்தை - - [சாஉ௰]

முகத்திலழுத்திமுயக்கிமயக்கி - - - - *
மிகுத்தநலத்தைவிளைத்துச்-சுகத்தில் - - [சாஉக]

ஆரத்தநிகர்த்ததரத்தையெயிற்றில் - - - *
இருத்தியருத்தியிசைத்துக்-கருத்திலிசை - - [சாஉஉ]

உற்றகரணத்திலொருவர்க்கொருவரொத்துவகை - - *
பெற்றநிலடிக்கடிபிணக்குவர-நற்றுயிலில் - [சாஉங]

மைத்திலகநெற்றிபுருவக்கடைநெறிப்புவர - *
உய்த்திடுகழுத்தொடுகையுட்புகுத-மெத்திய - [சாஉச]

கொந்தளபந்திகுலைந்துசரிந்திட - - - - *
வந்துசுரும்பரவஞ்செய-முந்திய - - [சாஉரு]

செஞ்சரணங்கள்சிலம்புபுலம்பிட - - - *
வஞ்சிமருங்குல்வளைந்திட-அஞ்சொலுடன் - [சாஉசா]

நெஞ்சமுமொன்றிநிரம்பியசங்கிசை - - - *
கொஞ்சவிரண்டுகைக்கும்பிட-விஞ்சிய - - [சாஉஎ]

ஆவியொன்றவாகமொன்றவாகையொன்றதேசமொன்ற ... *
மேவுபஞ்சபாணத்துங்கன்வீறடங்க-வாவுமின்ப ... (௪௨௮)

மேலணிந்தபூண்மழுங்கமேனியெங்கும்வேர்வரும்ப ... *
நீலமன்றல்வீசுழுந்தநீர்ததும்பக்-கோலமிகும் ... (௪௨௯)

மொய்யகலமேலிட்டமுத்துவடஞ்சிதறத் ... ... *
தூயதிருமேனிதுவட்சிதற-மெய்யுறநான் ... (௪௩௰)

ஆரமதனூலிலறிந்தறியாச்சந்தேகம் ... ... *
சேரவடைவேதெளிவித்துக்-காரிகையார் ... (௪௩௧)

தந்தவநுராகசம்போகங்கொண்டாடி ... ... *
இந்த்ரபதம்பெற்றவர்போலின்புற்றுச்-சிந்தை ... (௪௩௨)

தனையொன்றுவாட்கண்டருங்களைக்காம ... .. *
வினையென்றறியேனவிழ்த்தேன்-றனைகமழும் ... (௪௩௩)

சோலையெல்லாந்தேடினேன்சுற்றினேனாறுமல் ... *
மாலையெல்லாங்கொண்டுவருந்தினேன்-பாலனையார் ... (௪௩௪)

அப்போதுசென்றவடியல்லாமற்பார்த்தளவில் ... *
இப்போதுசென்றவடியான்காணேன்-மெய்ப்படநான் (௪௩௫)

காணவேமுந்திக்கனவென்றறிந்தக்கால் ... .. *
வீணிலேயோடிவிழிப்பேனோ-பேணி ... (௪௩௬)

அறிவுக்கினியாரகலாமற்கையால் ... ... ...*
இறுகத்தழுவியிரேனோ-நறுநுதலார் ... ... (௪௩௭)

சீரமுதக்கொங்கையையென்செவ்வாயிறுற்பற்றி ... *
ஆரமுதமுண்டுபோக்காகேனோ காரிகையார் ... (௪௩௮)

ஏயத்தனியேயெழுந்தருளவின்னமந்த ... ... *
மாயத்துயிலெனக்குவாராதோ-நேயமுடன் ... (௪௩௯)

மெத்தெனவேதீங்கிவிழித்தலும்பேசுவதும் ... *
இத்தனையுமோகவென்றியானறியேன்-சத்தியமே ... (௪௪௰)

என்றுவருந்தியெரியுங்கனல்வாயில் ... ... *
ஒன்றுமெழுகாயுருகினேன்-மன்றலணி ... ... (௪௪௧)

பாயலிலேசற்றேபரிசித்தமாத்திரத்தில் ... ... *
ஆயிரநாள்கூடினர்போலாயினேன்-சேயிழையார் ... (௪௪௨)

அன்பும்பெருநலமுமந்தரங்கமும்பெருக ... *
இன்பம்பெரிதாயிருந்ததுவும்-துன்பம் ... (௪௪௩)

அனைத்துந்தவிர்ப்பவர்போலாட்கொண்டதுவும் ... *
நினைத்துநெடுமூச்செறிந்துநின்றேன்-வினைக்கலகக் ... (௪௪௪)

கோபமதனாலேகுறையுயிருங்கொள்ளைகொள்ளும் ... *
சாபமதனாலேதயங்கினேன்-கோபமனத் ... (௪௪௫)

தொந்தமறியாற்றொடர்ந்துபோதாக்குறைக்கு ... *
வந்தமதிகாயமதியழிந்தேன்-சந்ததமும் ... (௪௪௬)

அண்டர்குறைத்தமரமானேனடல்வேழும் ... ... *
உண்டவிளங்கனிபோலுள்ளுடைந்தேன்-அண்டிவரும் (௪௪௭)

தீவாடையாலேதியங்கினேன்பார்மடந்தை ... ... *
மாவாடையாலேமயங்கினேன்-காவில் ... (௪௪௮)

செழுந்தென்றலூடாடச்செந்தீவடவைக் ... *
கொழுந்தென்றலாலேகுறைந்தேன்-தொழுந்தகைய (௪௪௯)

காளகண்டவாள்விழியார்கட்டளைகேளாச்செவியிற் ... *
காளகண்டவோசைபுகக்கன்றினேன்-மேளமிகும் .. (௪௫௰)

தந்திமருப்பென்னுந்தடமுலையார்காரளக ... ... *
பந்திமழைகாணப்பயிரானேன்-முந்தியருள் ... (௪௫௧)

தாவிப்பொருப்புமிசைச்சந்த்ரோதயங்காணு ... ... *
வாவிக்குமுதமலரானேன்-பாவியேன் ... (௪௫௨)

புண்ணானநெஞ்சகனிற்பொங்காரம்விட்டாரக் ... *
கண்ணல்லாருவமாயுங்காண்கிலேன்-எண்ணில் ... (௪௫௩)

விரகாதிமோகவிளைவாங்கடலின் ... ... *
கரையேறுகின்றவழிகாணேன்-உருகிமனம் ... (௪௫௪)

பேராசைகொண்டேன்பிழைக்கும்பொருட்டாகச் ... *
சோராதொருநினைவுதோன்றிற்று-நேராகக் ... (௪௫௫)

காமரூபமுந்துகலங்கிவருந்திருக்க் ... ... *
கேடமடலல்லதில்லைவலி-ஆமமைவே ... (௪௫௬)

சொன்னதிருவள்ளுவனாத்தோத்திரஞ்செய்தேன்கருத்தில் ... *
உன்னிமடலூர்தற்கொருப்பட்டேன்-வன்னநறுந் ... (௪௫௭)

தாதளவுஞ்செய்யவிதழ்த்தாமரைப்பூங்கண்ணனைக் ... *
காதளவுந்தாவடிபோங்கண்ணனைச்-சீதமுலைச் ... (௪௫௮)

சூதானையல்லையற்றசூதானைவள்ளையெனுங் ... *
காதானைச்சற்றுமிரங்காதானைப்-போதாகம் ... (௪௫௯)

செய்யானைமிக்கமறஞ்செய்தானைக்காந்தளெனுங் ... *
கையானையெவ்வளவிற்கைத்தானை-மெய்யமயல் ... (௪௬௰)

தந்தானைப்பூங்கமலன்றானைமாலளிக்க ... *
வந்தானைக்கொங்கையின்மேல்வாரானை-சிந்தைவெறுங் (௪௬௧)

கல்லானைமன்மதனூல்கற்றானைப்பருவ ... *
வில்லானையேழுலகும்விற்பானை-நல்ல[illegible] ... (௪௬௨)

தன்னிலவர்வன்னெஞ்சந்தானெழியமங்கைநல்லா ... *
ரொன்னும்படிவயிற்றெழுதிப்-பின்னர் ... [௪௬௩]

சடைகட்டிவெண்ணீறுசாத்திநறும்பூளைத் ... *
தொடைகட்டிவெள்ளெருக்குச்சூடி-உடல்கருக ... [௪௬௪]

நெஞ்சசரவேறெரித்தநிர்த்தனிவனென்றுமலர்ப் ... *
பஞ்சசரவேளும்பயப்படவே-விஞ்சமுதச் ... [௪௬௫]

செம்பவளவாயார்திருவேனைக்காரனென ... ... *
அம்பொனெடுங்காகளங்களார்ப்பவே-கும்பமுனி ... [௪௬௬]

சொற்றலைமையால்விளங்குந்தொல்காப்பியந்தெளிந்தே ... *
உற்றபெரியோர்நாற்பத்தொன்பதின்மர்-நற்றமிழ்நூல் [௪௬௭]

சேரும்வருணகுலாதித்தன்செழுங்கனகத் ... ... *
தாருவெனுங்கோனேரிராசனருள்-பேரறஞ்சேர் ... [௪௬௮]

ஆஸ்தானபோசனனைக்கேவேனைத்துரந்தோன் ... *
நாத்தானிரண்டுடையநாகரிகன்-காத்தான் ... [௪௬௯]

அருணமலர்மாதுபுணரச்சுதராய ... ... *
வருணகுலாதித்தன்மகிழுந்-தருணமயல் ... [௪௭௰]
தீர்வேண்பலர்காணத்தென்றுகவிதீயிற்சென் ... *
றார்வேண்டபனைமாவுகந்து. ... ... [௪௭௧]

ஆக கண்ணி-௪௭௧.

வருணகுலாதித்தன்மடல்-முற்றுப்பெற்றது.